1993 ஏப்ரல் 28]

505—

இராமநாதபுரம் மாவட்ட மருத்துவமனையில் வாந்தி, வயிற்றுப் போக்கு காரணமாக சேர்க்கப்பட்ட உள்நோயாளிகள்.

*16816—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்ட மருத்துவமனையில், வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கால் 1992 அக்டோபர் மாதத்தில் உள் நோயாளிகளாக சேர்க்கப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(ஆ) தடுப்பு நடவடிக்கையாக அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இராமநாதபுரம் தலைமை அரசினர் மருத்துவமனையில் கடந்த அக்டோபர் 1992ஆம் ஆண்டு, 44 நபர்கள் வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கினால் பாதிக்கப்பட்டு உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டார்கள்.

(ஆ) தகவல் கிடைத்தவுடன் 56,993 நபர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டிருக்கிறது. உப்புநீர்க் கரைசல் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டிருக்கிறது. குடிநீரைத் தூய்மைப்படுத்துவதற்காக பிளீச்சிங் பவுடர் மற்றும் குளோரின் மாத்திரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. கொதிக்க வைத்து ஆறிய நீரையே குடிக்க வேண்டுமென்று சொல்லி அந்த மக்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கின்றன. சுகாதார அலுவலர்கள் அனைத்துத் தடுப்பு நடவடிக்கைகளையும் தீவிரமாக மேற்கொண்டார்கள்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு நோய், மழைக் காலங்களில் வெள்ளம் அதிகமாக வருகிற காலங்களிலும், அதே சமயத்தில் வறட்சிக் காலங்களிலும் தண்ணீர்ப் பற்றாக்குறை இருக்கிற காரணத்தினால், இருக்கிற தண்ணீரைச் சாப்பிடும் போதும் ஏற்படுகிற, வாட்டர் பொல்யூஷனால் ஏற்படுகிற நோய். இது சீஸனாகத்தான் வருகிறது. அவ்வாறு வருகிறபோது, மருத்துவமனையில் நோயாளிகளைச் சேர்ப்பதற்கு '' ஐஸலேஷன் வார்டு'' என்று சொல்லப்படுகிற வார்டில் பாத்ரூம் வசதியில்லா

மல், லெட்ரின் வசதி இல்லாமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். இவைகளையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சீர்தூக்கிப் பார்த்து அவர்களுக்கு 'ஐஸலேஷன் வார்டை'' நிரந்தரமான நிலையில் பராமரிப்பதற்கு உத்தரவிடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஐஸலேஷன் வார்டிலே குறிப்பிட்ட சில ''பெட்ஸ்'' மட்டுமே அங்கே இருக்கும். குறைந்த எண்ணிக்கையில் மட்டுமே இருக்கும். திடீரென நோயாளிகள் ஒரே நேரத்தில் அங்கே அதிகமாக வந்து விடுகிறபோது, இது போன்ற சங்கடங்கள், பிரச்சினைகள், பற்றாக்குறை ஏற்படத் தான் செய்கிறது. நிரந்தரமாக அதற்காக ஏற்படுத்தி வைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்திருக்கிறார்கள். இது ஒவ்வொர் ஆண்டும் நடப்பதில்லை. ஏதாவது ஒரு ஆண்டு, 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை, 2 அல்லது 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக்கிறது. அதுவும் ஆண்டிலே ஒரு மாதம் அல்லது 2 மாதங்கள் மட்டுமே இவை பயன்படுத்தப்படுகின்றன. எனவே தான் இருக்கிற வசதிகளை வைத்து நாம் சமாளித்துக் கொண்டிருக்கிறோம். நிதிப் பிரச்சினை காரணமாக, எதிர்காலத்திலே நிதிநிலைமைகளை எல்லாம் மனதிலே வைத்து, நிதி ஓரளவிற்கு கிடைக்கக்கூடிய ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்படுகிறபோது சங்கடம் இல்லாத நிலை ஏற்படுகிறபோது அதைப் பற்றி ஆலோசித்து நடவடிக்கை எடுக்கலாம்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவ்வாறு அந்த ''எபிடமிக் டிசீஸஸ்'' வருகிறபோது, மாவட்ட அளவில் ''மூவிங் ஸ்குவாட்'' வைத்து உடனுக்குடன் வைத்திய வசதி கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திட்டமிட்டுள்ளார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆங்காங்கே அருகிலே இருக்கிற மருத்துவமனைகளிலே அதுபோல வசதிகள் அனைத்தையும் உடனடியாக ஏற்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஏதாவது திடீரென காலரா நோய் ஏற்பட்டுப் பரவுகிறது. அல்லது வயிற்றுப்போக்கு நோய் பரவுகிறது என்ற சூழ்நிலை ஏற்படுகிறபோது, அந்தப் பகுதியிலே இருக்கிற அதிகாரிகள் மூலமாக அத்தனை மருத்துவமனைகளுக்கும் தேவையான மருந்துகள் மற்ற வசதிகள் செய்து கொடுக்கப்படுகிறது. எனவே, மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று அவர்களுக்கு சிகிச்சை கொடுத்தால்தான் கொஞ்சம் சரியாக இருக்குமென்று நான் கருதுகிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தை, அதாவது '' மொபைல் யூனிட் ''-ஆக வைத்து செய்ய முடியுமா என்பதைப் பற்றி ஆய்வு செய்யலாம்.

சத்யமேவ ஜயதே TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 28]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கே. கந்தசாமி.

முற்பகல் 10-25

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு சட்டப்பேரவை துணைத் தலைவர் அவர்களே, உண்மையாக காலரா நோய் ஏற்பட்டால் அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும்போது அங்குள்ள டாக்டர்கள் அதை காலரா என்று குறிப்பிடாமல், வயிற்றுப் போக்கு என்றுதான் குறிப்பிடுகிறார்கள். உண்மையாக காலரா நோய் ஏற்பட்டால் கூட, காலரா என்று எழுதாமல் இருப்பது ஏன் ? அந்த மாதிரி வயிற்றுப் போக்கு என்றுதான் குறிப்பிட வேண்டுமென்று அறிவுரை உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு மனிதனுக்கு நோய் ஏற்படுகிறபோது அது காலராவாக இருந்தால் காலரா என்று குறிப்பிட வேண்டும். வயிற்றுப்போக்கு இருந்தால் வயிற்றுப்போக்கு என்று குறிப்பிட வேண்டும். இதிலே அரசாங்கத்திற்கு எந்த நஷ்டமோ இலாபமோ இல்லை. அவர்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தினுடைய நோக்கம். அரசாங்கம் இப்படிப்பட்ட எந்த உத்தரவையும் எந்த மருத்துவருக்கும் கொடுக்கவில்லை. மருத்துவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் டெக்னிக்கல் பீப்பில். அவர்களிடத்திலே போய் இப்படித்தான் செய்ய வேண்டுமென்று என்றைக்கும் அரசாங்கம் தலையிடுவது கிடையாது. எனவே, அவர்கள் என்ன நோய் இருக்கிறதோ அந்த நோயைத்தான் குறிப்பிடுகிறார்கள். எனவே, அதிலே தலையிடுவது கூட தவறு என்று நாங்கள் கருதுகிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வ. சத்தியமூர்த்தி.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, 5 ஆண்டுகளுக்கு அல்லது 2, 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை, எப்பொழுதாவது வருகிறது என்று சொன்னார்கள். கடந்த $1\frac{1}{2}$ ஆண்டுக் காலமாக தமிழ்நாட்டில், குறிப்பாக, இராமநாதபுரம் மாவட்டத்தில், கோடைக்காலம், மழைக்காலம் என்று வேறுபாடு இல்லாமல் தொடர்ந்து இந்த வயிற்றுப்போக்கு நோய் இருக்கின்றது. கடந்த மாதம் கூட முதுகளத்தூர் பகுதியில் இந்த வியாதியால் கடுமையாக பாதிக்கப்பட்டு பலபேர் சிகிச்சை பெற்று வந்துள்ளார்கள். இதற்குச் சுற்றுப்புறச்சூழல் மட்டும் காரணம் என்று தெரியவில்லை. ஏதோ ஒரு தொற்று நோய் உண்டாக்கச்கூடிய கிருமி அந்தப் பகுதியில் புதியதாக

ஏற்பட்டு இருப்பது போல ஒரு அச்சம் ஏற்படுகிறது. அதனைத் தடுக்கின்ற வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பிரத்தியேக உத்தரவின் பேரில் இந்த வயிற்றுப் போக்கு நோயைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்வாரா? கடந்த ஆண்டுகளை ஆய்வு செய்வோமேயானால் இந்த ஓராண்டுக் காலத்தில் ஏறத்தாழ 200 விழுக்காடு அதிகமாக இந்த வயிற்றுப்போக்கு நோயால் பாதிக்கப்பட்ட புள்ளி விவரம் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் கிடைக்கும் என்று நான் கருதுகிறேன். கடந்த ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நேரிடையாகக் கொண்டுவந்தபோது, அவர்கள் அருகிலேயே இருந்து அந்தத் துறையினுடைய செயலாளரை அழைத்து, இதற்குத் துரிதமான நடவடிக்கை எடுத்து மருந்துகள் எல்லாம் அனுப்ப வேண்டுமென்று நடவடிக்கை எடுத்தார்கள். அதற்கு, நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தாலும், இதுவரையிலும் இந்த வயிற்றுப்போக்கு வியாதியை முழுமையாக கட்டுப்படுத்த முடியவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் பிரத்தியேக நடவடிக்கை எடுக்க முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 200 சதவீதத்திற்கு மேலே என்று சொன்னார். அதற்கு வாய்ப்பே இல்லை. 100 சதவீதத்திற்கு என்று திருத்திக்கொள்ளுங்கள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரத்திலே எப்பொழுதுமே கொஞ்சம் குடிதண்ணீர், மழை பற்றாக்குறை, இப்படி இருந்துகொண்டே இருக்கும். மழை கொஞ்சம் அதிகமாக பெய்கின்ற நேரத்திலே இப்படிப்பட்ட நோய்கள் பரவுவதற்கான வாய்ப்பு சாதாரணமாக ஏற்பட்டுவிடுகிறது. ஆனால் இந்த ஆண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல கொஞ்சம் அதிகமான அளவில்தான், அங்கே வயிற்றுப் போக்கு ஏற்பட்டது. உடனே, உள்ளாட்சித்துறையோடு தொடர்புகொண்டு, அத்தனை நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுக்க வேண்டும் என்று எல்லாம் அறிவுறுத்தப்பட்டது. மாண்புமிகு உறுப்பினரை நான் கேட்டுக்கொள்வது இப்படிப்பட்ட செய்தி எங்கேயாவது வருகிறபோது அந்த பகுதியிலே இருக்கின்ற மக்கள் எப்படிப்பட்ட குடிநீர் கிடைத்தாலும், பாதுகாக்கப்பட்ட குடிநீராக இருந்தாலும் சரி, கிணறு அல்லது குளத்திலேயிருந்து எடுக்கிற தண்ணீராக இருந்தாலும், கொதிக்க வைத்து, ஆர வைத்து அவர்கள் அதைக் குடித்தால் பெரும் பகுதியான இந்தப் பிரச்சினை தடுக்கப்பட்டுவிடும், தீர்ந்துவிடும். அவர்கள் அதைப்பற்றியே கவலைப்படாமல், பக்கத்து வீட்டிலே இந்த நோய் பாதிக்கப்பட்டிருந்தாலும் கூட, குடிக்கிற தண்ணீரை கொதிக்க வைத்துக் குடிக்காத காரணத்தால் அவர்களுக்கும் வருகிறது, உடனே அரசாங்க மருத்துவ

மனைக்கு எடுத்து வந்து அங்கே நாம் அவர்களை காப்பாற்றுகிற சூழ்நிலை ஏற்படுகிறது. அதிலே காலதாமதம் ஏற்பட்டுவிட்டால் அவர்கள் இறந்து விடுகிற சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, இந்தச் சங்கடங்களை போக்குவதற்கு, பொது மக்கள் கொஞ்சம் விழிப்புணர்ச்சியோடு எங்கேயாவது இப்படிப்பட்ட சிரமங்கள் இருக்கின்ற இடத்திலே அல்லது இப்படிப்பட்ட சங்கடங்கள் ஏற்படுகின்ற இடத்திலே அவர்கள் தண்ணீரை கொதிக்க வைத்து குடிக்க வேண்டும். அதே போன்று உணவை சுட வைத்து சாப்பிடுவது இப்படிப்பட்ட நல்ல சூழ்நிலைகளை அவர்கள் கடைப்பிடித்தால் இந்தப் பிரச்சினைகள் முழுமையாக தீர்க்கப்படும் என்று கருதுகிறேன். எனவே, அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரை ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல, தனியாக ஆய்வு செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். தொடர்ந்து அந்த ஆய்வு செய்து இதைத் தவிர வேறு ஏதாவது பிரத்தியேகக் காரணம் இருக்குமா என்பது பற்றி சிந்திக்கும்படி, அதைப் பற்றி கேட்கும்படி, சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நாங்கள் அறிவுறுத்துவோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண். 506, திரு. பி. சொக்கலிங்கம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

506—

அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் மிக முக்கிய நபர்களுக்காக இருக்கைகள் ஒதுக்கீடு.

*9789—திரு. பி. சொக்கலிங்கம் : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் போக்குவரத்துப் பேருந்துகளில் மிக முக்கிய நபர்களுக்கு (V.I.P.) என இரண்டு இருக்கை ஒதுக்க ஆணை இருந்தும் தற்போது எந்த பேருந்திலும் இடம் ஒதுக்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இரண்டு இருக்கைகள் மிக முக்கிய நபர்களுக்கு ஒதுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

TRUTH ALONE TRIUMPHS